பக்கங்கள்:-23

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 12 | புதன்கிழமை | 26.03.2025 | அதிர்வு 233 |
|---|---|---|---|---|---|

## வியாழேந்திரன் கைது! ஏப்ரல் 1 வரை மறியல்!!



(கனகராசா சரவணன்)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு அதிகாரி 06

# ஆளுமையற்ற தலைவரின் கூட்டத்தில் நாம் பங்குபற்றுவதில் அர்த்தம் இல்லை

## யாழ். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்த சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

"யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குத் தலைவராக இருப்பவர் கூட்டத்தைக் கட்டுப்படுத்தி அதற்குரிய ஒழுங்குமுறையை மேற்கொள்ள வேண்டும். அப்படியாகக் கூட்டத்தை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் தொடர்ந்து இந்தக் கூட்டங்களில் நாம் பங்குபற்றுவதில் எந்த அர்த்தமும் இல்லை. அதனாலேயே கூட்டத்திலிருந்து வெளியேறினேன்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற 06

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை அர்ச்சுனாவே குழப்பினார்

# தலைவருக்குரிய அதிகாரத்தை நான் இனி முழுமையாகப் பயன்படுத்துவேன்

## அமைச்சர் சந்திரசேகர் உறுதிமொழி



(பிரபாகரன் டிலக்சன்)

**"மோசமான செயற்பாடுகள் மூலம் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குழப்பியுள்ளார். இனிவரும் காலங்களில் தலைவருக்குரிய அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துவேன்."**

**- இவ்வாறு அமைச்சரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.** 06

## யாழ்ப்பாணத்தில் அதீத போதையால் இளைஞர் மரணம்



(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணத்தில் அளவுக்கதிகமான ஹெரோயின் 06

## வவுனியாவில் கிணற்றில் இருந்து யுவதி ஒருவரின் சடலம் நேற்று மீட்பு



(கி.வசந்தன்)

வவுனியா, கலாபோகஸ்வேவ பகுதியில் கிணற்றில் இருந்து யுவதி ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, கலாபோகஸ்வேவ பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் பெண் ஒருவர் வீழ்ந்து இருந்ததை அவதானித்த ஊர் மக்கள் 06




இந்த வாரத்தில் இன்றுடன் மூன்று நாள்கள் மட்டுமே உயர் நீதிமன்றத்தில் வேலை நாள்களாக எஞ்சி உள்ளன.

இந்த மூன்று நாள்களுக்குள்ளும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் பல டசின் கணக்கான வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படக்கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன.

நேற்று வரை எனக்குக் கிட்டிய தகவல்படி மூன்று வழக்குகள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

யாழ் மாநகர சபையில் தங்கள் வேட்புமனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து தமிழ் மக்கள் கூட்டணியும், மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு தாங்கள் தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தென் இலங்கையில் மற்றொரு கட்சியுமே இந்த வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கின்றன.

தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணி – சங்கு சின்னக் கட்சி – பத்து உள்ளூராட்சி சபைகளில் தங்களுடைய வேட்பு மனுக்கள் 06





# சில அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளுக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இ.சந்திரசேகர் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அமைச்சர் சந்திரசேகர், அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நிறைவு செய்யுமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்தார்.

ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் வறுமையான தலா 3 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பான முன்மொழிவு முன்வைக்கப்பட்டு சபையின் அனுமதி பெறப்பட்டது.

இதன் பின்னர் கிராமிய வீதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதன்போது பிரதேச செயலர்களால் வீதிகளின் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா சில விடயங்கள் தொடர்பான தெளிவுபடுத்தலை ஆளுநரிடம் கோரியிருந்த நிலையில் அதற்குரிய விளக்கங்கள் ஆளுநரால் வழங்கப்பட்டன.

மேலும், யாழ். மாவட்டத்தில் மழை நீர் சேகரிப்புத் திட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் எத்தனை தொகுதிகள் அமைக்கப்படவுள்ளன என்ற முன்மொழிவு சபைக்கு முன்வைக்கப்பட்டு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது. அதேபோல், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள 3 வீதிகளின் திருத்தத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணம் நகருக்கான நீண்டகால நோக்கிலான அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், எஸ்.பவானந்தராஜா, ஜெ.ரஜீவன், க.இளங்குமரன், இ.அர்ச்சுனா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண பிரதம செயலர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.









# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

# சகல சபைகளிலும் வென்றிருப்போம் 9 சபைகளை நிராகரித்துவிட்டார்கள்

### ‘சங்கு’ கூட்டணியின் இணைத் தலைவர் சித்தர் கவலை




“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் வெல்லக் கூடிய வெற்றி வாய்ப்புகள் இம்முறை ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணிக்கு இருந்த நிலையில் 9 சபைகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரவுள்ளோம்.”

– இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ். சுன்னாகம் பகுதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகங்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பிரதேச சபைத் தேர்தல் என்பது கிராம மட்டத்தில் உள்ள விடயங்களைக் கையாள்வதற்குரிய தேர்தலாகும். எனவே, மக்கள் கிராமத்தில் செல்வாக்குரியவர்களுக்கு வாக்களிப்பார்கள். எனவே, நிச்சயமாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு மக்கள் வாக்களித்து அமோக வெற்றியடையச் செய்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

இந்நிலையில், யாழ். மாவட்டத்தில் எமது வேட்புமனுக்கள் 9 சபைகளில் நிராகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வோம்.” – என்றார்.

# யாழ். மாநகர சபை வேட்புமனு நிராகரிப்பு: உயர்நீதிமன்றம் சென்றுள்ள மணி தரப்பு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தமிழ் மக்கள் கூட்டணி வழக்குத் தொடர்ந்துள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியால் வழங்கப்பட்ட வேட்புமனுவில் பெண் வேட்பாளர் ஒருவரின் சத்தியக்கூற்றில் தவறு உள்ளது எனக் கூறி அந்தப் பெண் வேட்பாளரைப் பட்டியலில் இருந்து நீக்கியமையால் தேவையான பெண் பிரதிநிதித்துவம் இல்லை என யாழ். மாநகர சபைக்கான வேட்புமனுவைத் தேர்தல்கள் திணைக்களம் முற்றாக நிராகரித்துள்ளது.

“வேட்புமனுவில் தேவையான பெண் வேட்பாளர்களை உள்ளடக்கி இருந்தோம். ஆனால், ஒரு பெண் வேட்பாளரின் சத்தியக்கூற்றில் தவறு எனில் அவரை மாத்திரம் நீக்கி ஏனையோரைப் போட்டியிட அனுமதித்து இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் முழு வேட்புமனுவையும் நிராகரித்து 48 வேட்பாளர்களின் ஜனநாயக உரிமையை மறுத்துள்ளார்கள்.” – என்று தமிழ் மக்கள் கூட்டணியினர் கண்டனம் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையிலையே நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் ஊடாக உயர்நீதிமன்றத்தில் தமிழ் மக்கள் கூட்டணியினர் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் முன்னாள் மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணனை மேயர் வேட்பாளராகக் கொண்டு களமிறங்கிய தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்புமனுவே நிராகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





# பொய்யுரைக்கும் அநுர அரசுக்கு வாக்குகளால் பாடம் புகட்டுங்கள்

## மக்களிடம் சஜித் வேண்டுகோள்

“வளமான நாடு அழகான வாழ்க்கை என்று “திசைகாட்டி” பொய்யான தேர்தல் விஞ்ஞாபனப் பத்திரத்தையே முன்வைத்துள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொய்யுரைக்கும் இந்த அரசுக்கு மக்கள் தமது வாக்குகளால் திருப்பத்தை ஏற்படுத்தும் செய்தியை வழங்க வேண்டும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் பொலனறுவை மாவட்ட வேட்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“வளமான நாடு அழகான வாழ்க்கை என்று மக்கள் விடுதலை முன்னணியினர் பொய்கள் அடங்கிய தேர்தல் விஞ்ஞாபனப் பத்திரத்தையே முன்வைத்துள்ளனர். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கே ஜனாதிபதி தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்துள்ளது. வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின்போது ஆளுந்தரப்பினர் இந்த விஞ்ஞாபனத்தைக் காட்டி காட்டி விவாதத்தில் ஈடுபட்டனர்.

மூன்றில் ஒரு பங்கு அதாவது 33 சதவீதம் மின் கட்டணத்தைக் குறைப்பதாக தேர்தல் மேடைக்கு மேடை உறுதியளித்து இந்த அரச தரப்பினர் ஆட்சிக்கு வந்தனர். ஆறு மாதங்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்க முடியாது என மின்சார சபை அறிவித்தது. ஆனால், மக்களின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு பொதுப் பயன்பாட்டுக்கு ஆணைக்குழு 20% மின் கட்டணத்தைக் குறைத்தது. வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் மேலும் 13% ஆல் குறைக்க வேண்டும்.

எரிபொருள் விலை தொடர்பாகவும் இதுபோன்ற கதைகளே கூறப்பட்டன. கமிஷன், வரி என்று பேசி, அதிகாரம் கிடைத்தவுடன் அவற்றை நீக்கி பாரிய விலைக் குறைப்பைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்தனர். ஆனால், இன்னும் எரிபொருள் விலை குறையவில்லை.

35 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் வாக்குறுதி கூட திசைகாட்டியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறான கதைகளைக் கூறி, பட்டதாரிகளை ஏமாற்றி இன்று பட்டதாரிகளை துரத்தி துரத்தித் தாக்குகின்றனர். வேலை பெற்றுத் தருவோம் என திசைகாட்டி தலைவர்கள் தேர்தல் மேடையெங்கும் முழங்கிவிட்டு இன்று அவர்களை ஏமாற்றி வருகின்றனர்.

கடந்த வரவு – செலவுத் திட்ட விவாத காலப்பிரிவில் பொல்துவ சந்தியில் பல நாட்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் இறுதியில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு மக்களை ஏமாற்றும் அரசே தற்போது காணப்படுகின்றது.

மருந்துகள், உணவுப் பொருட்கள், பாடசாலை பொருட்கள் மீதான வட்வரி நீக்கப்படும் என அநுர சூளுரைத்தார். அவை இன்னும் நீக்கப்படவில்லை. இது தொடர்பில் மக்களுக்குத் தெரியப்படுத்தி, இந்த ஜனாதிபதி தலைமையிலான அரசை மக்கள் நீதிமன்றத்திற்கு முன் கொண்டு செல்ல வேண்டும். பொய் கபட நாடகம் ஆடி, இந்த அரசு உலக சாதனை படைக்கும் விதமாகப் பொய் உரைத்து வருகின்றது.

இன்று விவசாயிகளுக்கு உத்தரவாத விலை, அனர்த்த இழப்பீடு, உர மானியம் கூட கிடைத்தபாடில்லை. விவசாயிகளை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுக் கொண்டு விவசாயிகளை ஏமாற்றியுள்ளனர். மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிவாரணங்களை மட்டுப்படுத்தி, இந்த அரசும் முன்னாள் ஜனாதிபதியின் அடிச்சுவடுகளையே பின்பற்றி வருகின்றன. புதிய சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை கொண்டு வருவதாகக் கூறினாலும், எந்த மாற்றமும் இல்லாமல் முன்னாள் ஜனாதிபதியின் உடன்படிக்கையையே கொண்டு செல்கின்றனர். இதனால் பெரும்பான்மையான மக்கள் நிர்க்கதி நிலையை அடைந்துள்ளனர்.

இன்று சட்டம் கோலோச்சுவதாக தென்படவில்லை. குண்டர்கள், கொலைகாரர்கள், கப்பம் ஈட்டுபவர்கள் சமூகத்தை ஆள்கின்றனர். இதனால் பெண்கள், குழந்தைகள், குடிமக்கள் என சகலரும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் சமூகமானது இந்த அரசுக்கு ஒரு திருப்புமுனைக்கான செய்தியை தெரிவிக்க வேண்டும். தமது வாக்குகள் மூலம் மக்கள் இந்த திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும்.”

– என்றார்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




# கடந்த கால அனுபவங்களை கருத்தில் கொண்டு மன்னார் மக்கள் இந்த முறை வாக்களிப்பார்கள்!

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மக்கள் தமது கடந்த கால அனுபவங்களை கருத்தில் கொண்டு தமக்கு சேவை யாற்ற கூடியவர்களை அடையாளம் கண்டு சரியானவர்களைத் தெரிவு செய்வார்கள் என ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை நேற்றைய தினம் மன்னார் தேர்தல் அலுவலகத்தில் செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மன்னார் பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை செலுத்த இன்றைய தினம் (செவ்வாய்க்கிழமை) மன்னார் தேர்தல் அலுவலகத்திற்கு வருகை தந்தேன்.

இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மக்கள் தமது கடந்த கால அனுபவங்களை கருத்தில் கொண்டு, தமக்குத் சேவையாற்ற கூடியவர்களை அடையாளம் கண்டு, சரியானவர்களைத் தெரிவு செய்வார்கள் என்று நான் நம்புகின்றேன்.

அந்த வகையில் கட்சியின் மாவட்ட முக்கியஸ்தர்களுடன் சென்று மன்னார் பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளேன்.

இம்முறை மன்னார் மாவட்டத்தில் இரண்டு சபைகளிலே போட்டியிட உள்ளோம்.

எதிர்வரும் காலங்களில் கடந்த காலத்தை போல மன்னார் மாவட்டத்தில் அனைத்து சபைகளிலும் போட்டியிட்டு அனைத்து சபை களையும் கைப்பற்றுவோம்.

யாழ் மாவட்டத்தில் அனைத்து சபைகளுக்கும் வெற்றிகரமாக வேட்பு மனு தாக்கல் செய்துள்ளோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து இன்று காலை வழக்குகளை தாக்கல் செய்யும் என்று தெரிகிறது. ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் சங்கு அணியின் வழக்குகளைக் கையாளுகின்றார்.

எல்லா வழக்குகளும் வேட்புமனு நிராகரிப்புக்கு எதிரானவை என்றாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தினுசானவை. வேட்பு மனு நிராகரிப்புக்கு பல்வேறு காரணங்கள் காட்டப்பட்டுள்ளன.

ஒரே காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஒன்றாகப் பிரித்து, ஒரேயடியாக விசாரணை செய்ய வேண்டிய தேவை உயர்நீதிமன்றுக்கு ஏற்படுமென நினைக்கிறேன்.

தாக்கலாகிய வேட்பு மனுக்களை அவற்றின் கருத்து நிலைக்கேற்ப தரம்பிரித்து, ஒன்றாக்கி, அணி அணியாக அவற்றை உயர்நீதிமன்றம் விசாரிக்க வேண்டி இருக்கும்.

இப்படி விசாரணைக்கு ஏற்கும் மனுக்களின் அடிப்படையில் அந்தந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் நடவடிக்கைகளை இடை நிறுத்த உயர் நீதிமன்றம் உத்தரவிடலாம்.

என்ன நிலைமையை நோக்கி இந்த வழக்குகள் நகரும் என்பதை பெரும்பாலும் அடுத்த வார முற்பகுதியில் நாம் தெரிந்து கொள்ளலாம்.

நாட்டின் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களின் போக்கு எத்தகைய நகர்வை முன்னெடுக்கும் என்பது குறித்து அடுத்த வாரம் முற்பகுதியில் இந்த வழக்குகளை ஒட்டி உயர்நீதிமன்றம் வழங்கப் போகின்ற முதல் உத்தரவுகளை அல்லது வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டே முடிவு செய்யக் கூடியதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஒட்டி சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் விடயங்கள் அற்பமானவையாக தோன்றினாலும், அந்த விடயத்தை ஒட்டிய நீதிமன்ற விசாரணை சர்ச்சைகள் நிறைந்ததாகவும் சட்ட வியாக்கியானங்கள் தொடர்பில் ஆழமான பிரச்சினைகளை கையாளுவனவாகவும் இருக்கும் என்றே நினைக்கிறேன்.

சில சமயங்களில் இந்த வழக்குகள் வாரக் கணக்கில் இழுபட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அப்படி நடந்தால் அந்த உள்ளூராட்சி சபைகளில் வாக்களிப்பும் வார கணக்கில் தள்ளிப் போகக்கூடிய ஆபத்தும் உண்டு. எது குறித்தும் அடுத்த வாரம் முற்பகுதியில் நிலைமை தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

---

## தலைவருக்குரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல்வளங்கள் அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணநாதன் இளங்குமரன், ஜெ.ரஜீவன், ஶ்ரீபவானந்தராஜா, சிவஞானம் ஶ்ரீதரன், இராமநாதன் அர்ச்சுனா, வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் உள்ளிட்டவர்களுடன் திணைக்களங்களின் பதவி நிலை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், பாதுகாப்புத் தரப்பின் அதிகாரிகள் மற்றும் பிரதேச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கூட்டம் முடிந்த பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இராமலிங்கம் சந்திரசேகர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“வரவு- செலவுத் திட்டக் கூட்டத் தொடர் முடிவடைந்துள்ள நிலையில், யாழ். மாவட்டத்துக்கு பாதீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு தொடர்பில் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பதற்காகவே இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாவட்ட அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடப்படவிருந்த இந்தக் கூட்டத்தில் சிவன் பூஜையில் கரடி புகுந்தது போல சம்பவங்களும் இடம்பெற்றன.

தொல்லை தாங்க முடியாமல் எம்.பி. ஒருவர் வெளியேறிச் சென்றுள்ளார். மேலும் சில அதிகாரிகள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

எவருடைய பேச்சுக்கும் கட்டுப்படாத நபர் ஒருவரால்தான் இப்படி நடந்தது. நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மோசமாக நடந்துகொண்டார். தனக்குள்ள தனிப்பட்ட பிரச்சினை காரணமாக சம்பந்தமில்லாத விடயங்களைக் கூட அவர் குறிப்பிட்டுள்ளார்.

எத்தடை வரினும் யாழ். மாவட்டத்துக்குரிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடரும். அவை உரிய வகையில் முன்னெடுக்கப்படும்.

ஒருங்கிணைப்புக்குழு தலைவருக்குள்ள அதிகாரம் இனி முழுமையாகப் பயன்படுத்தப்படும்.

சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வரும். நாம் இது பற்றி மக்களிடமே முறையிடுகின்றோம். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.” - என்றார்.

---

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதைப்பொருளை ஊசி மூலம் உடலில் செலுத்திய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ். நல்லூர் பகுதியைச் சேர்ந்த ஜெயகுபேன் சுகன்யன் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். .

கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பர் ஒருவரின் வீட்டில் படுத்திருந்த மேற்படி இளைஞர், மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை மயங்கிய நிலையில் இருந்துள்ளார்.

அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளைக் கோப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

பிரத பரிசோதனையில் அதிகளவான ஹெரோயின் போதைப்பொருளை ஊசி மூலம் உடலில் ஏற்றியதால் மரணம் சம்பவித்துள்ளது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

---

## வியாழேந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களால் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை ஏப்ரல் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

15 இலட்சம் ரூபா இலஞ்சமாக வாங்கிய குற்றச்சாட்டில் கடந்த வருடம் கைது செய்யப்பட்ட வியாழேந்திரனின் பிரத்தியேக செயலாளரான அவரின் சகோதரரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில் அதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் எஸ்.வியாழேந்திரனைக் கொழும்பில் வைத்து இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் நேற்று கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில் கடந்த 2024 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி மண் அகழ்வுக்கு அனுமதி பெற்றுத் தருவதாக வர்த்தகர் ஒருவரிடம் 15 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக வாங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் மற்றும் பிரதேச அமைப்பாளர் ஆகிய இருவரையும் மட்டக்களப்பு - கல்லடி கடற்கரைப் பகுதியில் வைத்து இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் கைது செய்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனிடம் விசாரணைகளை மேற்கொண்டு வந்த இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினர், குறித்த சம்பவத்துக்கு உடந்தையாக இராஜாங்க அமைச்சர் இருந்துள்ளார் எனக் கண்டறிந்தனர். இந்நிலையில், அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

---

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், பெண்ணைச் சடலமாக மீட்டனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி க.கரிபிரசாத் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

வவுனியா, கலாபோகஸ்வேவ பகுதியைச் சேர்ந்த 30 வயது யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காகச் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

---

## ஆளுமையற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இருந்து வெளியேறிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என்பது மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக நிதானத்தோடும் பொறுமையோடும் பொறுப்புணர்வோடு அந்த விடயங்களைக் கையாண்டு அடுத்த அபிவிருத்தி பற்றி பேசப்பட வேண்டிய கூட்டம்.

ஆனால், இங்கு 07

# காசநோய் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு







காசநோய் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று செவ்வாய்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி வைத்தியர் சத்தியமூர்த்தி, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி வைத்தியர் பிரசாத், தொற்று நோயியல் பிரிவினர் வைத்தியர்கள் சுகாதாரத் துறைப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இந்த விழிப்புணர்வு செயலமர்வில் கலந்து கொண்டனர்

# நாட்டில் 08 மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

நாட்டில் 08 மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாளை, நாளை மறுதினம் மற்றும் 29 ஆம் திகதிகளில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்தது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட்ட 08 மாவட்டங்களின் 37 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்



திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

## ஆளுமையற்ற...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டத்தில் என்ன நடக்கின்றது என்றால் அரச அதிகாரிகளை அழைத்து வந்து அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதும் அவர்களைக் கீழ்த்தரப்படுத்துவதும் அல்லது அவர்களின் செயற்பாடுகளை முடக்கின்ற மாதிரியான செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளில் மக்கள் பிரதிநிதிகள் ஈடுபடுவதைக் கூட்டத்தின் தலைமை கட்டுப்படுத்த வேண்டும்.

இந்தக் கூட்டத்துக்குத் தலைவராக இருப்பவர் கூட்டத்தைக் கட்டுப்படுத்தி அதற்குரிய ஒழுங்குமுறையை மேற்கொள்ள வேண்டும்.

அப்படியாகக் கூட்டத்தை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் தொடர்ந்து இந்தக் கூட்டங்களில் நாம் பங்குபற்றுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

ஆக மொத்தத்தில் ஆரோக்கியமான கூட்டமாக இது அமையவில்லை. இந்தக் கூட்டம் எந்தப் பிரயோசனமும் இல்லாத கூட்டமாகவே அமையும். ஆகையினால்தான் இந்தக் கூட்டத்திலிருந்து நான் வெளியேறியுள்ளேன்.

மேலும் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களில் அரசியல் சார்ந்த விடயங்கள் பேசக் கூடாது. கூட்ட நிகழ்ச்சி நிரலிலும் இந்த விடயம் சொல்லப்பட்டு இருந்தது.

ஆனால், தொடர்ந்தும் தொடர்ந்தும் அதிகாரிகளை வலிந்து இழுத்து அவர்கள் மீது குற்றம் காண்பதாகச் செய்கின்றனர்.

இவ்வளவு காலமும் அபிவிருத்திகள் எதுவும் இங்கு நடக்கவில்லையா? அல்லது இந்த அதிகாரிகள் செயற்படவில்லையா? எனவே, தொடர்ச்சியாக அதிகாரிகள் மீது குற்றம் காண்பதை நிறுத்த வேண்டும். இந்தக் கூட்டங்கள் ஒரு ஒழுங்குமுறைக்கு வர வேண்டும்.

ஆகையினால் இதில் இருப்பதில் அர்த்தமில்லை என்பதைச் சொல்லிவிட்டு நாம் ஒரு செயற்பாட்டை முன்னெடுத்து வெறியேறியுள்ளேன்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரிசி அரசியல்

உலகமயமாதல் பாதிப்பினால் இலங்கை மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் கூட மாறி வருகின்ற போதிலும், இலங்கைத் தீவு மக்களின் பிரதான உணவுப் பொருள் அரிசிதான்.

ஒரு காலத்தில் - குறிப்பாக இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் - ஐம்பதுகள், அறுபதுகள், எழுபதுகளில் இலங்கை அரசியலைத் தீர்மானிக்கும் விவகாரமாக அரிசி விலை இருந்து வந்தமை மறந்து விடக் கூடியதல்ல.

அரிசிக்கான மானியத்தை வெட்டியமையை அடுத்து, ஒரு கொத்து அரிசியின் விலை 25 சதத்திலிருந்து 70 சதமாக உயர்த்தும் நிலைமை ஏற்பட்ட போதுதான் 1953இல் அரசுக்கு எதிரான எதிர்ப்பியக்கம் தீவிரமாகி, வேலை நிறுத்தப் போராட்டமும் சூடு பிடித்தது. வரவு - செலவுத் திட்டம் சமயம் நாடாளுமன்றுக்கு முன்னால் வெடித்த போராட்டம் நாடு முழுவதும் பரவிய சூழ்நிலையில், தமது சுகவீனத்தைக் காரணம் காட்டி அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்கா பதவி விலக, கேணல் சேர் ஜோன் கொத்தலாவல பிரதமரானார். அவர் பதவியேற்றதும் அரிசிக்கான மானியத்தை ஒரு பகுதியேனும் மீள வழங்கி நிலைமையைச் சீராக்க முயற்சித்தார்.

அந்தக் காலம் முதல், நீண்ட பல தசாப்தங்களாக இலங்கை அரசியலைத் தீர்மானிக்கும் விடயமாக அரிசி இருந்து வந்திருக்கின்றது. எழுபது தேர்தல்களில் சந்திர மண்டலத்தில் இருந்தாவது ரூபாய்க்கு படி அரிசி கொணர்ந்து தருவோம் என்று தேர்தல் மேடைகளில் பேசப்பட்டது.

அரிசி விலை ஆட்சியைக் கவிழ்க்கும் விவகாரமாக ஒரு காலத்தில் இருந்தது.

அரிசிக்கு மட்டும் அல்லாமல் ஏனைய அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பும் இப்போது நெருக்கடி தரும் விவகாரமா மாறி வருகின்றது.

இந்தப் புது வருட பிறப்பின் போது நாட்டில் அரிசி நெருக்கடி மோசமாக ஏற்படும் என்று இப்போதே ஆருடம் கூறப்படுகின்றது.

அரிசியைத் தட்டுப்பாடின்றி விநியோகிப்பது மற்றும் மலிவு விலையில் மக்களுக்கு அது கிடைப்பதை உறுதி செய்வது போன்ற விடயங்களில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் உடனடியாக அரிசியை இறக்குமதி செய்வதற்கான திட்டங்களை விழுந்தடித்து மேற்கொள்கின்றது. அதை விடுத்து, முதலில் நாட்டுக்குள் அரிசிச் சந்தையைச் சரிவரக் கையாண்டு நிர்வகிக்கும் அதிகாரக் கட்டமைப்பை நிறுவுவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று விவசாயிகளின் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அரிசித் தட்டுப்பாட்டுப் பிரச்சினையையும், விலை உயர்வு நெருக்கடியையும் சமாளிப்பதற்காக உடனடியாக அரிசியை இறக்குமதி செய்து குறைந்த விலையில் விநியோகிப்பது என்பது பொருளாதார மீளெழுச்சிக்கான வழியல்ல என்று சுட்டப்படுகின்றது.

அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினைகளைச் சமாளிக்கும் விதமாக அரசாங்கம் அரிசி அல்லது பிற பொருள்களை இறக்குமதி செய்யக்கூடாது என்றும், ஏனெனில் இது நீண்ட காலத்திற்கு இந்தப் பிரச்சினைகளை மோசமாக்கும் என்றும் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

தமிழ் - சிங்களப் புத்தாண்டு சமயம் வரக் கூடிய அரிசி நெருக்கடியை அரசாங்கம் எப்படிச் சமாளிக்கப் போகின்றது?

# சட்டவிரோதமாக தங்கியிருந்த 10 பங்களாதேஷ் பிரஜைகள் கைது



ஐரோப்பாவிற்கு தப்பிச்செல்லும் நோக்கில் நாட்டில் சட்ட விரோதமாக தங்கியிருந்த 10 பங்களாதேஷ் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க – ஆடியம்பலம் பகுதியில் தங்கியிருந்த மேற்படி பிரஜைகள் குடிவரவு – குடியகல்வு திணைக்க ளத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

பங்களாதேஷிலிருந்து இந்தியாவிற்கு வந்த சந்தேக நபர்கள் கடந்த பெப்ரவரி மாதம் கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக நாட்டை வந்தடைந்துள்ளனர்.

20 முதல் 30 வயதுக்கிடைப்பட்ட 10 ஆண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படும் போது சந்தேகநபர்களிடம் நாட்டில் தங்கியிருப்பதற்கான விசா காலம் நிறைவடைந்திருந்தது.

கைது செய்யப்பட்டவர்கள் மீண்டும் நாடு கடத்தப்படும் வரை வெலிசறை தடுப்பு மத்திய நிலைத்தில் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# இ.போ.ச. பஸ் மோதி படுகாயம் அடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி மரணம்

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். ஊர்காவற்றுறை – பாலக்காட்டு சந்தியில் இ.போ.ச. பஸ் மோதியதில் படுகாயம் அடைந்த மோட்டார் சைக்கிள் சென்ற வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த குருசாமி கணேசலிங்கம் (வயது 82) என்ற வயோதிபராவார்.

கடந்த சனிக்கிழமை முற்பகல் மேற்படி வயோதிபர் மோட்டார் சைக்கிளில் பாலக்காட்டு நாற்சந்தியைக் கடக்க முற்பட்டபோது அதிவேகமாக வந்த இ.போ.ச. பஸ் அவரை மோதித் தள்ளியது.

இதில் படுகாயங்களுக்கு உள்ளானவர் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.








# வடக்கில் விடுவிக்க இணங்கிய காணிகளை உடனடியாக விடுவிக்குமாறு கோர தீர்மானம்

## ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு

வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக் களம் என்பன கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் விடுவிக்க இணங்கிய காணிகளை உடனடியாக விடுவிக் குமாறு, அடுத்த மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உயர் மட்டக் கலந்துரையாடலில் கோருவது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று செவ்வாய்க் கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் மீள்குடியமர்வு, அபிவிருத்தி, விவசாயம், சுற்றுலாத்துறை என எந்தவொரு விடயத்தையும் மேற்கொள்ள முடியாதளவுக்கு வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் முட்டுக்கட்டைகள் தொடர்ச்சியாகப் போடப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் விசனம் வெளியிட்டார்.

கிளிநொச்சிக்கு வருகை தந்த காணி ஆணையாளர் நாயகத்திடம் இது தொடர்பில் முறையிட்ட நிலையில், அவர் இந்த விடயத்தை விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்பாசன அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதாகவும், அதற்கு அமைவாக எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன் றத்தில் உயர்மட்டக் குழுக் கலந்துரையாடலுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக் களம் என்பவற்றால் ஒவ்வொரு மாவட்டங்களிலும் விவசாய நிலங்கள், மேய்ச்சல் தரவைகள், குளங்கள், வயல்கள், மக்கள் மீள்குடியமர்வுக்கான காணிகள் என்பன எவ்வளவு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பில் மாவட்ட ரீதியாக விவரங்களைத் தயாரிக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இதன்போது அரச காணிகள் மாத்திரமே, ஒதுக்கக் காணி களாக அரச திணைக்களங்களால் அறிவிக்க முடியும் என வும், தனியார் காணி எனின் அதனைச் சுவீகரித்தே ஒதுக்கக் காணிகளாக அறிவிக்க முடியும் என்றும் சட்ட ஏற்பாடு உள்ள போதும் வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன அதனைப் பின்பற்றாமல் வர்த்த மானியை வெளியிட்டுள்ளன என ஆளுநருக்கு சுட்டிக்காட் டப்பட்டது.

மேலும், 2010ஆம் ஆண்டுக்கு முன்னர் நிலஅளவைத் திணைக்களத்தின் வரைபடத்துக்கு அமைவாக வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களம் என்பன காணிகளை வர்த்தமானியில் பிரசுரித்தன என்றும், 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் கூகுள் வரைபடத்தின் உதவியுடன் அந்தத் திணைக்களங்கள் நேரடியாக தமக்குரியதாக அடை யாளப்படுத்தும் காணிகளை வர்த்தமானியில் பிரசுரித் துள்ளன என்ற தகவலும் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

வடக்கில் சில மாவட்டங்களில் வனவளத் திணைக்களத் துக்குரிய காணிகள், வனவளத் திணைக்களத்துக்கு என அடையாளப்படுத்தப்பட்டுள்ள காணிகள் என்பனவற்றை விடுத்து மக்களின் வயல் காணிகளாக உள்ளவற்றுக்குள்ளும் வனவளத் திணைக்களத்தின் எல்லைக் கல்லுகள் போடப் பட்டுள்ளன என அதிகாரிகள் ஆளுநருக்குத் தெரியப்படுத் தினர்.

அதேநேரம் சில இடங்களில் வனவளத் திணைக்களமும், வனஉயிரிகள் திணைக்களமும் ஒரே காணிகளையே தமக் குரியதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

கடந்த ஆண்டு வடக்கின் 5 மாவட்டங்களில் விடுவிப் பதற்கு வனவளத் திணைக்களம் இணங்கிய காணிகளின் அளவுகளை விட புதிதாக தமது திணைக்களத்துக்கு கோரும் காணியின் அளவு அதிகம் என்றும் ஆளுநரின் கவனத் துக்கு அதிகாரிகள் கொண்டு சென்றனர்.

வனவளத் திணைக்களத்தால் சில இடங்கள் வர்த்தமானி யில் பிரசுரிக்கப்பட்டபோதும் அங்கு மக்கள் மிக நீண்டகால மாக வசித்துவருகின்றனர். ஆனால் அவர்களுக்கான சட்ட பூர்வ ஆவணங்களோ, வீட்டுத்திட்ட உதவிகளோ முன்னெ டுக்க முடியாத நிலைமை இருப்பதாகவும், அதேபோன்று சட்ட பூர்வமான ஆவணங்கள் உள்ள ஒருதொகுதி மக்கள் வர்த்த மானி அறிவித்தலால் தமது வசிப்பிடங்களில் குடியேற முடியாத நிலைமை இருப்பதாகவும் ஆளுநருக்குத் தெரி யப்படுத்தப்பட்டது.

அரச அதிகாரிகள் அபிவிருத்தித் தேவைக்காக காணி களை விடுவிக்குமாறு வனவளத் திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைத்தால் அது நிராகரிக்கப்படும் அதேவேளை, தனியார் முதலீட்டாளர்கள் அல்லது வர்த்தகர்கள் முன்வைக்கும் கோரிக் கையை ஏற்று அவர்களுக்கு காணிகளை விடுவிக்கும் செயற்பாடுகளும் வடக்கில் நடைபெறுவதாக அதிகாரிகள் ஆளுநரிடம் குறிப்பிட்டனர்.

இதேநேரம், இந்தத் திணைக்களங்களின் பாகுபா டான செயற்பாடுகள் தொடர்பிலோ அல்லது அந்தத் திணைக்களங்களின் நடவடிக்கைகள் தொடர்பிலோ வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கேள்வி எழுப்பினால், மேற்படி இரண்டு திணைக்களங்களின் உயர் அதிகாரிக ளால் அவமரியாதை செய்யப்படுவதாகவும் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டினர்.

இந்த விடயங்களைக் கவனத்திலெடுப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், எதிர்வரும் 9ஆம் திகதி கலந்துரையாடலுக்கு முன்னர் வடக்கு மாகாணத்தின் விவரங்களை உரிய வகை யில் தயார் செய்யுமாறும், கடந்த காலங்களில் எதிர்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் இரு திணைக்களங்கள் தொடர்பிலான விடயத்தை அணுகுவோம் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கின் 5 மாவட்டங்களின தும் மேலதிக மாவட்ட செயலர்கள் (காணி), வடக்கு மாகாண காணி ஆணையாளர், பிரதி நில அளவையாளர் நாயகம் (வடக்கு) ஆகியோர் கலந்துகொண்டனர்.








# வல்வெட்டித்துறை மக்கள் ஜனாதிபதியை விரும்பி ஒருபோதும் வரவேற்கவில்லை

**வடமாகண கடற்றொழில் சமாசத்தின் பிரதிநிதி நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவிப்பு**

(எஸ்.ரகுதீஸ்)

வல்வெட்டித்துறை மக்கள் ஜனாதிபதி அநுரவை விரும்பி ஒருபோதும் வரவேற்கவில்லை என்று வடமாகண கடற்றொழில் சமாசத்தின் பிரதிநிதி நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றைய தினம் ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வல்வெட்டித்துறை மக்கள் ஜனாதிபதி அநுரவை விரும்பி ஒருபோதும் வரவேற்கவில்லை. அவர்களாகே ஏற்பாடு செய்து, கொட்டகை போட்டு கூட்டத்தை கூட்டினார்கள். ஊருக்கு வந்த ஜனாதிபதியை வரவேற்க வேண்டும் என்ற சம்பிர தாயத்திற்காக நிறைகுடம் வைத்து வரவேற்கப்பட்டதே தவிர விரும்பி அழைக்கப்படவில்லை. அன்றைய கூட்டத்திற்கு வந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வெளியூர்களில் இருந்து பஸ்களில் அழைத்து வரப்பட்டவர்களே.

நிலமை இவ்வாறு இருக்கையில், வல்வெட்டித்துறையை தொட்ட முதல் ஜனாதிபதி என வீரவசனம் பேசும் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், வன்னியில் இறுதி யுத்தத்தில் விமான குண்டுகள் வீசப்பட்டு தமிழ் மக்கள் கொன்றொழிக் கப்பட்ட போது அங்கு செத்தது மக்கள் அல்ல எல்லோரும் புலிகள் என பேசியிருந்தார். அப்படிப்பட்ட சந்திரசேகரன் இப்ப பசுந்தோல் போர்த்திய புலி மாதிரி தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பி வருகின்றார்.” – என்றார்.

# அமைச்சர்களுக்கான இல்லங்கள் குறித்த அறிக்கை ஜனாதிபதி செயலகத்திடம்



அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை வேறு பணிகளுக்காக பயன்படுத்துவது தொடர்பில் ஆராய் வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில் இது தொடர்பில் தீர்மானிக்கப் படுமென பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை பொருளாதார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற் கான இயலுமையை கண்டறிவதற்காக ஐவரடங்கிய குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டது.

# முன்னாள் ராஜாங்க அமைச்சர் கைதானமையை வெடி கொளுத்திக் கொண்டாடிய இளைஞர்கள்!

## மட்டக்களப்பு நகரில் நேற்றிரவு சம்பவம்





(கனகராசா சரவணன்)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனை இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு கைது செய்துள்ளனர் என ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தமையை அடுத்து ஒன்றிணைந்த சில இளைஞர்கள் மட்டக்களப்பு நகர் மணிக்கூட்டு கோபுரத்து வீதி சுற்றுவட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 9.00 மணியளவில் வெடி கொளுத்திக் கொண்டாடினர்.

முன்னாள் அமைச்சர் கைது விவகாரம் மாவட்டத்தில் மக்கள் மத்தியில் பேசும் பொருளாக மாறிய நிலையில் நேற்று இரவு சுமார் 09.00 மணியளவில் மட்டக்களப்பு நகர் மணிக்கூட்டு கோபுரத்து வீதி சுற்றுவட்டத்தில் இளைஞர்கள் ஒன்றிணைந்து வெடிகளைக் கொளுத்தி சந்தோசத்தை வெளிப்படுத்தினர். அந்த பகுதி இரவில் திடீரென வெடி சத்தத்தினால் அதிர்ந்ததையடுத்து மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# அதிக விலைக்கு பொருள்களை விற்பவர்களை தேட சுற்றிவளைப்பு





பண்டிகைக் காலத்தில் அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகளை கண்டறிவதற்காக நுகர்வோர் விவகார அதிகாரசபையால் நாடளாவிய ரீதியில் நேற்று முதல் விசேட சுற்றிவளைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சோதனை நடவடிக்கைகள் தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்துள்ளார்.

நியாயமற்ற விலையில் பொருள்களை விற்பனை செய்பவர்களிடம் ஏமாற வேண்டாம் என நுகர்வோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்க முழு ஆதரவு

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



“தேசபந்து தென்னகோன் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தகுதியற்றவர் என்பதை அவர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட போதே நாம் குறிப்பிட்டிருந்தோம். எனவே தற்போது அவரை பதவி நீக்குவதற்கு முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“தேசபந்து தென்னகோன் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தகுதியற்றவராவார். அவர் இந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட போதே நாம் அதனைத் தெரிவித்திருந்தோம்.

அரசியலமைப்பு பேரவையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் கபீர் ஹசீம் ஆகியோர் இந்த நியமனத்துக்கு கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

எனினும் ஆளுந்தரப்பு அதனை கவனத்தில் கொள்ளாததால் நீதிமன்றத்தின் ஊடாக தேசபந்து தென்னகோன் பொலிஸ்மா அதிபராக பணியாற்றுவதற்கான தடையுத்தரவைப் பெற்றுக் கொண்டோம்.

அது மாத்திரமின்றி அண்மையில் நீதிமன்றத்தால் கைது செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவர் சட்டத்தை அவமதிக்கும் வகையில் தலைமறைவாகியிருந்தார்.

எனவே அவர் பதவி நிலையிலிருந்து தரமிறக்கப்பட வேண்டும் என்பதற்கான கோரிக்கையையும் நாம் நீதிமன்றத்தில் முன்வைத்திருக்கின்றோம்.

இந்நிலையில் அவரை பதவி நீக்குவதற்கான யோசனையை ஆளுந்தரப்பு எம்.பி.க்கள் நாடாளுமன்ற பொதுச் செயலாளரிடம் கையளித்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

எமது நாட்டு சட்டத்துக்கமைய பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் உள்ளிட்டவர்களை பதவி நீக்கம் செய்வதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு இருக்கிறது.

இதனை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கி, அதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அதன் பின்னர் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்படும். அந்த குழு முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும்.

நாடாளுமன்றத்தில் ஆகக் குறைந்தது 113 வாக்குகளுடன் இந்த யோசனையை நிறைவேற்ற முடியும். ஐக்கிய மக்கள் சக்தி என்ற ரீதியில் நாம் இதற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம்.” என்றார்.

# யாழ்.இஸ்லாமிய சகோதரர்களுக்கு இந்தியாவின் ரமழான் அன்பளிப்பு










இந்திய அரசாங்கத்தினதும், இந்திய மக்களினதும் ரமழான் அன்பளிப்புக்களை இஸ்லாமிய சகோதரர்களுக்கு வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தியத் துணைத் தூதுவர் மாண்புமிகு சாய் முரளி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு, அன்பளிப்புக்களை மக்களுக்கு வழங்கி வைத்தார்.

# சிவாகம கலாநிதி தானு மஹாதேவக் குருக்கள் இணுவிலில் காலமானார்; இன்று இறுதி நிகழ்வு

## அவரது ஆத்ம சிவப்பிராப்திக்கு இந்துக் குருமார் அமைப்பு இறைஞ்சல்

இணுவில் தர்ம சாஸ்தா குருகுல முதல்வர் சிவாகம கலாநிதி தானு மஹாதேவக் குருக்கள் தமது 88 ஆவது வயதில் இணுவிலில் நேற்றுக் காலமானார்.

அவரின் இறுதி நிகழ்வு இன்று மதியம் இணுவிலில் இடம்பெறுகின்றன.

அவருக்கு சிவப்பிராப்தி வேண்டி இந்துக் குருமார் அமைப்பு ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவாகமகலாநிதி. சிவஸ்ரீ. கு.வை. க.வைத்தீஸ்வர குருக்கள் மற்றும் செயலாளர் சிவஸ்ரீ ச.சாந்தரூப குருக்கள் ஆகியோர் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:



எமது "சிவாகம கலாநிதி" அந் தணர்களின் உயர்வுக்கு, இணுவில் தர்ம சாஸ்தா குருகுலம் மூலமும் குருகுல கல்வி முதல் பல்வேறு வழிகளில் பங் காற்றிய பெருந்தகை. அவர் நம்மை விட்டுப் பிரிந்து சிவபதமடைந்தார் என அறிந்து மிகவும் கவலை அடைந் தோம்.

பாரதத்தின் மைந்தனாக, பல மொழி ஆளுமை மிக்கவராக, அன்புடன் அனைவரையும் அர வணைக்கும் பண்பாளராக திகழ்ந்த வர். யார் எந்த உதவி கேட்டாலும் உடனே தயங்காமல் வழிவகுப்பார். ஓர் ஆசான் எப்படி வாழ வேண்டும் என முன்னுதாரணமாக வாழ்ந்தவர்.

இந்தியாவில் உள்ள ஆதீனங்கள், குருகுல அதிபர்கள் உள்ளிட்ட பெரி யோரது அன்புக்கும் மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரியவராக திகழ்ந் தவர்.

அண்மையில் தருமை ஆதீன 27 ஆவது நட்சத்திர குருமணிகளால் "சிவாகம கலாநிதி" எனும் சிறப்புடன் கௌரவம் வழங்கப்பட பெருந்தகை. இக்கௌரவத்தினை இந்திய துணை தூதுவர் குருக்கள் அவர்களின் இல்லம் தேடி சென்று வழங்கியமை குறிப்பி டத்தக்கது.

யாவரும் இறை நியதியை ஏற்க வேண்டிய சூழ்நிலை.

அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்கு அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்கி றோம். அத்துடன் உறவுகளுக்கு எமது ஆறுதலை இந்துக் குருமார் அமைப்பு சார்பில் பகிர்ந்து கொள்கிறோம்.




# வவுனியா - புதிய சாளம்பைக்குளத்தில் சிறப்பாக இடம்பெற்ற இப்தார் நிகழ்வு

(கி.வசந்தன்)

வவுனியா, புதிய சாளம்பைக் குளம், மஸ்ஜிதுல் அக்ஸா ஜீம்மா பள்ளியில் இப்தார் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட ஜம்மியதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷேக் என்.பி.ஜீனைத் மதனியின் பங்கேற் புடன் இது நடைபெற்றது.

நோன்பு இருந்த அக் கிராம மக் கள் நேற்றய் மாலை 6.22 இற்கு மஸ்ஜிதுல் அக்ஸா ஜீம்மா பள்ளிக்கு வருகை தந்து இப்தார் நிகழ்வில் பங்கு பற்றி, தொழுகையில் ஈடுபட்டனர். இதில் புதிய சாளம்பைக்குளம் கிராமத் தைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்ட னர்.





# உடப்பில் நேற்று சங்காபிஷேக நிகழ்வு

**(உடப்பு க.மகாதேவன்)**

புத்தளம் – உடப்பு ஆண்டிமுனை தென்னந்தோப்பில் அமைந்துள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தின் வருஷாபிஷேகமும்,1008 சங்குகளுடன் சங்ஷேகாபிஷேகமும் நேற்று செவ்வாய்க்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

ஆலயக்குருக்கள் சிவஸ்ரீ ஆகமசீலன் மற்றும் தனுஷன் சர்மா ஆகியோர் கலந்து கொண்டு கிரியைகளை ஆரம்பித்து வைத்தனர். இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் வை.கந்தசாமி கலந்து கொண்டார்.

அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று, பூஜைகள் இடம்பெற்று ஓம குண்டம் வளர்க்கப்பட்டது. பின்னர் பிரதான கும்பம் சுமக்கப்பட்டு உள் வீதி வலம் வந்து மூலஸ்தான அம்பாளுக்கு அபிஷேகம் இடம்பெற்றது. இதன் போது பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.இறுதியில் மக்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.















# செங்கலடிப் பகுதியில் மலசல கூடத்தில் உணவைத் தயாரித்து விற்பனை செய்த உணவக உரிமையாளருக்கு ஒரு மாதச் சிறை

## 60 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தது நீதிமன்றம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு செங்கலடி பொது சுகாதாரப் பிரிவிலுள்ள உணவகம் ஒன்றில் மலசல கூடத்தில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற முறையில் உணவு தயாரித்து விற்பனை செய்த கடை உரிமையாளருக்கு ஒரு மாத கால சிறைத்தண்டனை விதித்த ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதிவான் 60 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

அந்தப் பிரதேசத்திலுள்ள உணவகங்களை நேற்று முன்தினம் பொது சுகாதார பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் முற்றுகையிட்டுச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதன் போது ஓர் உணவகத்தில் மலசல கூடத்தில் உணவு தயாரித்து விற்பனை செய்து வந்ததைக் கண்டுபிடித்து அந்த உணவக உரிமையாளரைக் கைது செய்தனர்.

இதனையடுத்து அந்த உணவக உரிமையாளரை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டமையை அடுத்து அவரை ஒரு மாத காலம் சிறையில் அடைக்குமாறும் 60 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் வீதி ஓரத்தில் கொள்கலனில் அமைக்கப்பட்டுள்ள இரு உணவகங்களில் மனித பாவனைக்கு பொருத்தமற்ற உணவுகளை விற்பனை செய்த இரு கடைகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.




# டியூட்டரிகளுக்கு விடுமுறை வழங்குமாறு கல்முனை மாநகர சபை அறிவுறுத்தல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்களை 2025.03.25 ஆம் திகதி தொடக்கம் 2025.04.15 ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடி, விடுமுறை வழங்குமாறு மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம்.றாபி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் தெரிவிக்கபட்டிருப்பதாவது:-

பல்வேறு தரப்பினராலும் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வருகின்ற கோரிக்கைகளுக்கு அமைவாக நோன்பு மற்றும் நோன்புப் பெருநாள், தமிழ், சிங்கள புதுவருடம் மற்றும் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையின் பின்னர் மாணவர்கள் தங்கள் உயர்தர வகுப்புக்கான கற்கை நெறிகளை தெரிவு செய்வதற்கான கால அவகாசம் வழங்குதல் போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இதன் பிரகாரம் இந்தக் காலப்பகுதியில் தனியார் கல்வி நிலையங்களை தற்காலிகமாக மூடி, விடுமுறை வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு அவற்றின் நடத்துநர்கள் மற்றும் ஆசிரியர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அவ்வாறு செயற்படத் தவறும் கல்வி நிலையத்திற்கான அனுமதி இரத்து செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டி ஏற்படலாம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்று கல்முனை மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவித்தல் கடிதத்தின் பிரதிகள் கண்காணிப்பு மற்றும் உரிய நடவடிக்கைகளுக்காக கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர், கல்முனை, சாய்ந்தமருது மற்றும் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.




# காஷ்மீரை விட்டு பாகிஸ்தான் உடனடியாக வெளியேறவேண்டும்

## ஐ.நாவில் இந்தியா வலியுறுத்தல்

ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தை பாகிஸ்தான் தொடர்ந்து சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வருவதாகவும், அதிலிருந்து பாகிஸ்தான் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா வலியுறுத்தியது.

ஐ.நா. பாதுகாப்பு சபையின் வெளிப்படையான விவாதத்தின் போது ஜம்மு-காஷ்மீர் பிரச்சினையை பாகிஸ்தான் நேற்று முன்தினம் முப்பியது. இது தொடர்பாக பேசிய இந்திய வெளியுறவுத்துறை துணை அமைச்சர் தாரிக் ஃபடாமி,

“இந்திய ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வசிக்கும் மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்துவது என்ற தனது தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு அவை நிறைவேற்ற வேண்டும். காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி கிடையாது. ஐ.நாவின் அதிகாரபூர்வ வரைபடத்தில் ஜம்மு காஷ்மீர் சர்ச்சைக்குரிய பகுதி என்ற குறிப்பிடப்பட்டுள்ளது.” என தெரிவித்தார்.

பாகிஸ்தானின் இந்த உரைக்கு எதிர்ப்பு தெரிவித்துப் பேசிய ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி தூதர் பர்வதனேனி ஹரிஷ்,

“ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக நேற்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது, எப்போதும் இருக்கும். ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தை பாகிஸ்தான் தொடர்ந்து சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளது, அதை அது உடனடியாக காலி செய்ய வேண்டும்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம் குறித்து பாகிஸ்தான் பிரதிநிதி மீண்டும் தேவையற்ற கருத்துக்களை தெரிவித்திருப்பதை இந்தியா கவனிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதுபோன்ற தொடர்ச்சியான உரைகள், காஷ்மீர் தங்கள் பகுதி எனும் அவர்களின் சட்டவிரோத உரிமை கோரல்களை உறுதிப்படுத்தாது. மேலும், பாகிஸ்தான் அரசு ஆதரவுடன் நடைபெறும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தையும் நியாயப்படுத்தாது.

இந்த மன்றத்தின் கவனத்தைத் திசைதிருப்ப பாகிஸ்தான், தனது குறுகிய மற்றும் பிளவுபடுத்தும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க வேண்டாம் என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம்.” என்று தெரிவித்தார்.

# நடிகர் மனோஜ் காலமானார்



பிரபல இயக்குனர் பாரதிராஜாவின் மகனும், நடிகருமான மனோஜ் பாரதி காலமானார்.

48 வயதான மனோஜ் பாரதி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இதய அறுவை சிகிச்சை மேற்கொண்டார் என கூறப்படுகிறது. அறுவை சிகிச்சைக்கு பின்னர் ஓய்வெடுத்து வந்த நிலையில் சேத்துபட்டு பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று மாரடைப்பு காரணமாக அவர் காலமானார்.

1999ஆம் ஆண்டு தாஜ்மகால் என்ற படத்தின் மூலம் அறிமுகமான மனோஜ் பாரதி, கடல் பூக்கள், சமுத்திரம், அல்லி அர்ஜுனா, விருமன், மாநாடு, ஈரநிலம் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.



# நடிகை ரன்யா ராவ் தங்க கடத்தல் வழக்கில் 15 பேருக்கு தொடர்பு; கர்நாடக அரசு தகவல்

நடிகை ரன்யா ராவ் மீதான தங்க கடத்தல் வழக்கில் 15 பேருக்கு தொடர்பு இருப்பதாக கர்நாடக அரசு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கர்நாடக பொலிஸ் டி.ஜி.பி. ராமசந்திர ராவின் வளர்ப்பு மகளும், நடிகையுமான ரன்யா ராவ் (வயது 32) டுபாயில் இருந்து 14.8 கிலோ தங்கம் கடத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 3 ஆம் திகதி பெங்களூர் சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். வருவாய் புலனாய்வு இயக்குநரக அதிகாரிகள் அவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வரும் நிலையில், சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை அதிகாரிகளும் விசாரணையில் இறங்கியுள்ளனர்.

ரன்யா ராவின் தங்க கடத்தலுக்கு அவரது வளர்ப்பு தந்தை ராமசந்திர ராவ் உடந்தையாக இருந்தார் என தகவல் வெளியானது. இதுகுறித்து கர்நாடக குற்றப்பிரிவு பொலிஸார், ராமசந்திர ராவ், ரன்யா ராவ் ஆகியோரிடம் விசாரணை நடத்தினர். இதன் இறுதி அறிக்கையை கர்நாடக அரசின் கூடுதல் தலைமை செயலர் கவுரவ் குப்தா நேற்று முன்தினம் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

பின்னர் கவுரவ் குப்தா கூறும்போது, "கர்நாடக பொலிஸார் நடத்திய விசாரணையின் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். ரன்யா ராவ் தங்க கடத்தலுக்காக அடிக்கடி டுபாய் சென்று வந்தார் என்பது விசாரணையில் உறுதியாகியுள்ளது. இந்த வழக்கில் அவருடன் 15 பேர் தொடர்பு வைத்திருக்கலாம் என எங்களது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம். இறுதி விசாரணை அறிக்கையின் விவரங்களை முழுமையாக வெளியிட இயலாது." என்றார்.

# நடிகரும் கராத்தே நிபுணருமான ஷிஹான் ஹுசைனி காலமானார்

தென்னிந்திய நடிகரும், கராத்தே மற்றும் வில்வித்தை நிபுணருமான ஷிஹான் ஹுசைனி நேற்று இரத்தப் புற்றுநோய் காரணமாக காலமானார்.

அவரது மறைவுச் செய்தியை அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தினர்.

அவரது உடல் சென்னை பெசன்ட் நகரில் உள்ள அவரது இல்லத்தில் குடும்பத்தினர், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்படும்.

பின்னர், அவரது உடல் மதுரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இறுதிச் சடங்குகள் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹுசைனி தனது சமூக ஊடகப் பக்கங்களில் தொடர்ந்து புதுப்பிப்புகளை வழங்கி தனது புற்றுநோய் பயணத்தை ஆவணப்படுத்தி வந்தார்.



அவரது பதிவுகளைப் பார்த்த தமிழக அரசு அவரது புற்றுநோய் சிகிச்சைக்காக 5 லட்சம் இந்திய ரூபா நிதி உதவி வழங்கியது.

அவர் இறப்பதற்கு சில நாள்களுக்கு முன்பு, ஹுசைனி தனது உடலை மருத்துவ ஆராய்ச்சிக்காக தானம் செய்யும் முடிவை அறிவித்திருந்தார்.



# சிரியா மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

சிரியாவின் வான் கட்டமைப்புகள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.

சிரியாவின் Palmyra நகரில் உள்ள விமானத்தளத்தில் மீதமுள்ள சிரிய இரானுவம் மீது தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

சிரியா மற்றும் லெபனான் மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்களால் போர் மேலும் வலுவடையுமென ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.










# நியூசிலாந்தின் தெற்கு தீவில் 6.7 ரிக்டர் அளவு நில அதிர்வு!

நியூசிலாந்தின் தெற்கு தீவில் 6.7 ரிக்டர் அளவிலான நில அதிர்வு பதிவானதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நில அதிர்வு நேற்று பதிவானதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆழிப்பேரலை அறிவுறுத்தல் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மதிப்பீடு செய்து வருகிறது.

வலுவான மற்றும் அசாதாரண நீரோட்டங்கள் மூலம் ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளதால், சவுத்லேண்ட் மற்றும் ஃபியோர்ட்லேண்ட் குழைசனடயினெ பகுதிகளில் வசிப்பவர்கள் கடலோர பகுதிகளிலிருந்து விலகி இருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொருள்கள் மற்றும் கட்டடங்கள் அசைந்தன எனவும் 4,700 இற்கும் மேற்பட்டோர் நிலநடுக்கத்தை உணர்ந்தனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.





# அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகளின் குழுவில் தவறுதலாக இணைக்கப்பட்டார் ஊடகவியலாளர்

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சமூக ஊடகக் குழுவில் ஊடகவியலாளர் ஒருவர் தவறுதலாக இணைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க நிர்வாகத்தின் உயர்மட்ட அதிகாரிகள் இணைந்துள்ள யேமன் ஹூதி கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கான திட்டங்கள் தொடர்பான சமூக ஊடகக்குழுவில் குறித்த ஊடகவியலாளர் தவறுதலாக இணைக்கப்பட்டுள்ளார்.

மார்ச் 15ஆம் திகதி அமெரிக்காவினால் ஹூதி கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு 4 நாள்களுக்கு முன்னர்மேற்படி ஊடகவியலாளர் குழுவில் தவறுதலாக இணைக்கப்பட்டுள்ளார் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

குழுவில் கலந்துரையாடப்பட்டமைக்கு அமைவாக மார்ச் 15ஆம் திகதி அமெரிக்காவினால் யேமன் ஹூதி கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக ஊடகவியலாளரால் செய்தி அறிக்கையிடப்பட்டது.

அமெரிக்காவின் துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ், பாதுகாப்பு செயலாளர் பீ.டி.ஹெக்சென், சீ.ஐ.ஏ. பணிப்பாளர் ஜோன் ரெட்க்ளிப் உள்ளிட்ட உயரதிகாரிகள் இந்த குழுவில் உள்ளனர்.

சபாநாயகர் மைக் ஜோன்சனால் ஊடகவியலாளர் தவறுதலாக குழுவில் இணைக்கப்பட்டார் எனவும் இவ்வாறானதொரு சம்பவம் மீண்டும் நிகழாதெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தக்குழுவில் இணைக்கப்பட்டமை தொடர்பில் அந்த ஊடகவியலாளர் எவ்வித தகவல்களையும் அறிந்திருக்கவில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.03.2025




இன்று அனுகூலமான நாள். இன்று வெளிப்படையாக இருப்பீர்கள். உங்கள் செயல்களில் உறுதியுடனும் நேர்மறையாகவும் இருங்கள்.

உங்கள் பணியை முறையான அணுகுமுறையுடன் கையாள வேண்டும் நேர்மறையான பலன்களைப் பெறுவதற்கு இது மிகவும் அவசியம்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறை நன்மை தரும்.

தேவையற்ற செலவினங்களை சந்திக்கும் கட்டாயம் உண்டாகும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

நடப்பவைகளை லேசாக எடுத்துக்கொள்வது நல்லது. அதிகமாக யோசிப்பதையும் மிகுந்த உணர்ச்சிவசப்படுதலையும் தவிர்க்க வேண்டும்.




சில நேர்மறையான மாற்றங்கள் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். பணிச் சுமை காரணமாக நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

மிகுந்த பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் கடுமையாக நடந்துகொள்ள நேரலாம். உங்கள் துணையிடம் பக்குவமான அணுகுமுறையை கையாள வேண்டும்.

பணப் பற்றாக்குறையை சந்திப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

தலைவலி அல்லது தொண்டை சம்பந்தமான வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாள் முற்போக்கான நாளாக அமைய நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். கவலையை விட்டொழித்து நம்பிக்கையுடன் இருங்கள்.

நீங்கள் செய்கின்ற பணியில் நல்ல பலன்களைக் காணலாம். நீங்கள் உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் நட்பான அணுகுமுறை மூலம் உங்களின் துணையை மகிழ்விப்பீர்கள். இது அவருடனான புரிந்துணர்வை அதிகரிக்கும்.

உங்களிடமுள்ள பணத்தைக் கொண்டு நலமாக இருப்பீர்கள். நீண்ட நாள் நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மிகுந்து காணப்படும்.




முக்கியமான முடிவுகள் எடுக்கும் போது சிறிது கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் பிரச்சினைகளைச் சந்திக்க நேரும்.

நீங்கள் பணி நிமித்தமாக ஒரு சிறிய பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

உங்கள் மனதில் காதல் வயப்பட்ட எண்ணங்கள் காணப்படும். உங்கள் துணையுடனான நடத்தையில் அது வெளிப்படும்.

நல்ல விசேஷங்களுக்காக பணம் செலவு செய்ய நேரிடும். உங்கள் உடன் பிறந்தோர் வீட்டு விசேஷங்களில் பங்கேற்பீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்க உதவும்.




இன்று உற்சாகமாக காணப்படுவீர்கள். அதனால் திருப்தி ஏற்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைவீர்கள்.

உங்களின் திறமை காரணமாக பணிகளை செவ்வனே செய்து முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனதில் உணர்ச்சிகரமான உணர்வுகள் காணப்படும். உங்கள் துணையுடனான உறவை இது வலுப்படுத்தும்.

நிதிநிலைமை நன்றாக இருக்கும். உங்களால் வங்கியில் பணத்தை சேமித்து சேமிப்பை அதிகமாக்க முடியும். இது உங்களுக்கு திருப்தியளிக்கும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று ஆற்றலுடனும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.




பயண அலைச்சல்களும் அதன் காரணமாக சோர்வும் காணப்படும். உங்கள் முயற்சியில் நல்ல பலன்களைப் பெறுவதற்கு உங்களை அமைதியாக வைத்திருக்க முயலுங்கள்.

மிகுந்த முயற்சிகளை எடுத்து நிறைய வேலைகள் செய்த பொழுதும் உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து உங்களுக்கு பாராட்டுகள் கிடைக்காது.

உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் துணையிடம் சாந்தமான அணுகுமுறை வேண்டும். உங்கள் பதட்டமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவது நல்ல புரிந்துணர்வுக்கு அனுகூலமாக அமையாது.

பணம் நிறைய கிடைக்காது. ஆனால் கடனுக்கு விண்ணப்பித்தால் உங்கள் கடனுக்கான ஒப்பளிப்பு கிடைக்கும்.




நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிச்சுமை அதிகமாக இருந்தாலும் நீங்கள் அதை சரிகட்டி செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்துகொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

பணஇழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தொண்டை எரிச்சலுக்கான சாத்தியம் காணப்படுகின்றது. குளுமையான உணவு உட்கொள்வதை தவிர்த்தல் நல்லது.




அதிர்ஷ்டகரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிகள் நலம் பயப்பதாக காணப்படும். சலுகைகளும் ஊக்கத் தொகையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். பயனுள்ள வகையிலும் நல்ல செயலுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படுகின்றது. நீங்கள் சுறுசுறுப்பாகவும் தைரியமாகவும் உணர்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.03.2025




உங்கள் பொறுமை சோதிக்கப்படும். என்றாலும் மேறகொண்டு திட்டமிடுவதற்கு அது உங்களுக்கு நன்மை தருவதாக அமையும். பிரார்த்தனையில் ஈடுபடுவது மற்றும் மந்திரங்களை கேட்பது மன அமைதியை ஏற்படுத்தும்.

சிறப்புடன் பணியாற்றுவீர்கள். பதவி உயர்வு வடிவத்தில் பாராட்டுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் புரிந்துணர்வின் மூலம் உங்கள் துணையுடன் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்களின் அர்ப்பணிப்பான பணி காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அத்தகைய உற்சாகம் உஙகளுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள்.




இன்று துடிப்புடன் காணப்படுவீர்கள். உங்கள் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வீர்கள். இன்று பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும்.

நீங்கள் உங்கள் பணியில் சவால்களை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும். உங்கள் பங்கை நிறைவேற்றுவதற்கு உன்னதமான திட்டமிடல் வேண்டும்.

உங்கள் துணையுடன் நுண்ணுணர்வோடு காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

பணவரவிற்கான சாத்தியம் இல்லை. உங்கள் நிதிநிலையை நன்றாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




நீங்கள் உங்கள் வருங்காலத்திலும் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

பணிகளைப் பொறுத்தவரை இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்காது. பணிச்சுமை அதிகமாகக் காணப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்கவைத்துக் கொள்வதற்கான நோக்கமும் ஆற்றலும் குறைந்து காணப்படும். நட்பான அணுகுமுறையைக் கையாளவும்.

பணப்புழக்கம் உற்சாகமளிக்கும் வகையில் காணப்படாது. கூடுதல் செலவினங்கள் செய்ய நேரிடும்.

மனஅழுத்தத்தின் காரணமாக கால் வலி மற்றும் முதுகு விறைப்பு போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இனிய பாடல்களைக் கேட்பதன் மூலம் உங்களை ஆசுவாசப்படுத்திக்கொள்ளுங்கள்.




இன்றைய நாள் ஆக்கமுடைய நாளாக அமையும். சிறிய தொலைவிலான பயணமும் மற்றும் சில மாற்றங்களின் காரணமாக உங்கள் தைரியத்தையும் உறுதியையும் நீங்கள் இழக்க நேரலாம்.

குறித்த நேரத்திற்குள் கொடுக்கப்பட்ட பணியை முடிப்பது சற்று கடினமாக இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் மற்றும் உங்கள் துணையின் இடையே தொடர்பாடலில் இடைவெளி காணப்படும். இது உறவின் சீரமைப்பை கெடுக்கும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்வது நல்லது.

நிதிநிலைமை சீராகவோ நல்ல முறையிலோ காணப்படாது.



# வவுணதீவில் இரு பொலிஸாரை கொலை செய்த சம்பவம்; கைதான நால்வரும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் ஆஜர்

(கனகராசா சரவணன்)

வவுணதீவில் இரு பொலிஸாரைத் துப்பாக்கியால் சுட்டும் வெட்டியும் கொலை செய்த – உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான ஸஹரான் குழுவைச் சேர்ந்த – நான்கு பேரும் கொழும்பில் நான்காம் மாடி பொலிஸ் பாதுகாப்பில் இருந்து அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புடன் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

நான்கு பேரையும் எதிர்வரும் ஜுன் 25 ஆம் திகதி ஆஜர்படுத்துமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி நேற்று திங்கட்கிழமை முன்தினம் உத்தரவிட்டார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதி வவுணதீவு வலையிறவு பாலத்திற்கு அருகில் உள்ள பொலிஸ் சாவடியில் இரவு கடமையில் இருந்த பொலிஸ் சார்ஜன்ட் நிரோசன் இந்திர பிரசன்னா மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் டினேஸ் ஆகிய இரு பொலிஸாரையும் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் வெட்டியும் கொலை செய்த சம்பவம் தொடர்பாக 2019 ஏப்பிரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான ஐ.எஸ்.ஐ.எஸ்ஸைச் சோந்த ஸாரானின் குழுவைச் சேர்ந்த கபூர் மாமா என அழைக்கப்படும் ஸாரானின் சாரதியான முகமது சர்ப் ஆதம்லெப்பை, மில்ஹான், பிறதோஸ், நில்காம் ஆகிய 4 பேரை குற்றப்புலனாய்வுத் துறையினர் கைது செய்திருந்தனர்.

இதனையடுத்து 4 பேருக்கும் எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணைக்காக கொழும்பு குற்றப்புலனாய்வுத் துறையினரின் காவலில் இருந்துவரும் நான்கு பேரும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புடன் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை எடுத்துக் கொண்ட நீதிபதி இவர்களை மீண்டும் எதிர்வரும் ஜுன் 25 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டார்.